முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1644

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.03.2024**, சனிக்கிழமை

1. ஞானிகள் பலம்கொண்ட அரங்கனே
   ஞானபண்டிதனாக வாழும் தேசிகனே
   ஞானிகளை இந்த கலியுகத்திலும் படைக்க
   ஞான அவதாரம் கொண்ட குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   வரமென அரங்கனுக்கு சோபகிருது சேல் திங்களில்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 17 ம் நாள், 30.03.2024, சனிக்கிழமை)
   வல்லமைபட சுப்ரமணியர் யானும் தொடர்ந்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனுக்கு சக்தி கூட்டி
   உலகத்தில் அரங்கன் வழி உலகமாற்றம் நிகழ
   குறைவின்றி ஆறுமுகன் யான்
   குரு சீடர் பந்தங்கள் கூட்டி
4. குவலயம் எங்கும் அரங்கனுக்கு தொண்டர்படைகளை உருவாக்கி
   ஆற்றல்பட அன்னதான சேவையும் அறம் என்கின்ற மகா சக்தியையும்
   வரமென உலகோர்க்கு ஈட்டி
   வல்லமைபட  ஆறுமுகன் யான் காத்துவருகின்றேன்
5. வருகவே அரங்கமகான் தொடர்பு கூட்டி
   வையகதில் எவரெல்லாம் ஞானம் பயில்கின்றாரோ
   அண்ணவர்களுக்கெல்லாம் ஆறுமுகன் என் அருள்துணை கிடைப்பதோடு
   அச்சமற அவர்களெல்லாம் தர்ம வழிகளில் வந்து
6. அரங்கன் வழி அளவில்லா
   அன்னதான சேவை ஆற்றி
   அகிலத்தையே தர்மலோகமாக மாற்றி
   அற்புதங்களை கண்டடையக் கூடும்

7. கூடவே அரங்கமகான் ஆசிபெற்ற தொண்டர்களெல்லாம்
குருபரன் என்னருளாலே ஞானிகளாக உண்டாகி
இந்த கலியுகத்தில் மாற்றம்
ஞான உலக மாற்றமாக நிகழ்த்தக் கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–